Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 17.04.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 17.04.2026 – வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன் வரும் 19ஆம் தேதி முதல் 2 நாள் பயணமாக இலங்கை செல்கிறார்.

நாரி சக்தி வந்தன் அதினியத்தில் திருத்தம் செய்ய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

நியமன உறுப்பினர் திரு. ஹரிவன்ஷ் தொடர்ந்து 3ஆவது முறையாக மாநிலங்களவை துணைத் தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

மேற்காசிய நெருக்கடிக்கு மத்தியில், நாடு முழுவதும் உள் நாட்டு எல்பிஜி விநியோகம் சீராக உள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

***சி.பி. ராதாகிருஷ்ணன் (10)***

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன் வரும் 19ஆம் தேதி முதல் 2 நாள் பயணமாக இலங்கை செல்கிறார். தனது பயணத்தின்போது, திரு. ராதாகிருஷ்ணன், இலங்கை அதிபர் திரு. அனுர குமார திசநாயக்காவை சந்தித்து உரையாட உள்ளார். மேலும், அந்நாட்டு பிரதமர் டாக்டர் ஹரினி அமரசூரியா-வையும், பிற முக்கிய பிரமுகர்களையும், இலங்கை வாழ் இந்திய சமூகத் தலைவர்களையும் குடியரசு துணைத் தலைவர் சந்திக்க உள்ளார். இந்தியாவின் மகாசாஹர் தொலைநோக்குத் திட்டத்திலும் மற்றும் அண்டை நாடுகளுக்கே முன்னுரிமை என்ற கொள்கையிலும் இலங்கை முக்கிய பங்களிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

***நாரிசக்தி (13)***

நாரி சக்தி வந்தன் அதினியத்தில் திருத்தம் செய்ய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார். மகளிர் இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவாக அனைத்து அரசியல் கட்சிகளும் வாக்களிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். இந்த மகளிர் மசோதாவில், திருத்தம் செய்வது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற்று வருவதாக கூறிய பிரதமர், இந்த திருத்தம் குறித்து பரவி வரும் தவறான கருத்துக்களை

அகற்ற தர்க்க ரீதியிலான பதில்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும், ஒவ்வொரு பிரச்சனையையும் மத்திய அரசு நிவர்த்தி செய்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் மக்கள் தொகையில், பெரும்பாலானோர் தங்களுக்குரிய உரிமையை பெற வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றும், நாட்டின் சக்தியை கவுரவிக்க இது ஒரு சிறந்த வாய்ப்பு என்றும் கூறியுள்ளார்.

***மக்களவை -1 (3)***

மக்களவையில் மகளிர் இட ஒதுக்கீடு, தொகுதி மறுவரையறை, யூனியன் பிரதேச சட்டத்திருத்த மசோதாக்கள்மீது இன்று பிற்பகல் வாக்கெடுப்பு நடைபெற்றது. இது குறித்த கூடுதல் தகவல்கள்...

**(வாய்ஸ்)**

***மக்களவை - 2 (16)***

**(வாய்ஸ்)**

முன்னதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி வலிமையான இந்தியாவின் அடையாளமாக, பெண்களின் வலுவான ஆற்றல் திகழ்கிறது என்று, தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். நாட்டில் உள்ள பெண்கள் அனைத்துத் துறைகளிலும், அர்ப்பணிப்புடனும், சேவை மனப்பான்மையுடனும் செயலாற்றுவதாக பிரதமர் தெரிவித்தார்.

தொடர்ந்து, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறுகையில், இதுவரை நடைமுறை படுத்தாத பழைய சட்டங்களை செயல்படுத்துவதற்காகவே மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவிற்கான அறிவிக்கை வெளியிடப்பட்டதாக குறிப்பிட்டார். எதிர் கட்சிகள் இவ்விஷயத்தை அரசியலாக்கக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

காங்கிரஸ் உறுப்பினர் திரு. சசி தரூர் பேசுகையில், நாடாளுமன்ற விரிவாக்கம் மற்றும் தொகுதி மறு வரையறையை மனதில் கொண்டு மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை நடைமுறைப் படுத்துவது குறித்து கவலை தெரிவித்துள்ளார். உரிய முடிவை எட்டுவதற்கு முன்னர், விரிவான விவாதத்தின் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

***மக்களவை - 3 (12)***

2ஆவது நாளாக இம்மசோதா மீது நடைபெற்ற விவாதத்தில் பேசிய திமுக உறுப்பினர் திருமதி. கனிமொழி, தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும் நடைபெறும் தேர்தல்களுக்கு, இடையூறு விளைவிக்கும் வகையிலேயே மத்திய அரசு இந்த 3 மசோதாக்களையும் அறிமுகம் செய்ய இந்த சிறப்புக் கூட்டத் தொடரை நடத்துவதாக குற்றம் சாட்டினார்.

இதனிடையே மக்களவையிலும், சட்டப் பேரவைகளிலும் மகளிருக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்யும் 106ஆவது அரசியல் சாசன சட்டத்திற்கான அறிவிக்கை நேற்றிரவு வெளியிடப்பட்டதை அடுத்து, அச்சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. இதற்கான அறிவிப்பை மத்திய சட்ட அமைச்சகம் வெளியிட்டுள்ளது. இந்த வரலாற்று சிறப்புமிக்க சட்டம் மகளிருக்கு 3இல் ஒரு பகுதி, இட ஒதுக்கீட்டிற்கு வழி வகுக்கிறது.

***சிராக் பாஸ்வான் (19)***

இந்தியாவின் நறுமணப் பொருட்கள் துறையின் முழு திறனையும் வெளிப்படுத்த தரம், புதுமை மற்றும் வலுவான தொழில்துறை ஆகியவற்றின் அவசியத்தை மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் வலியுறுத்தினார். புதுடெல்லியில், இன்று, PHD வர்த்தகம் மற்றும் தொழில்சபை ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் உரையாற்றிய அவர், மசாலாப் பொருட்களை சமையலறை அத்தியாவசியங்களாக மட்டுமே கருதுவதைத் தாண்டி, ஊட்டச்சத்துப் பொருட்கள், உணவுப் பொருட்கள் மற்றும் உலகளாவிய வர்த்தகம் போன்ற துறைகளில், அவற்றின் பயன்பாடுகளை ஆராய வேண்டும் என்று கூறினார். இந்தியாவின் வரலாற்று வர்த்தக வேர்கள், நறுமணப் பொருட்களுடன் ஆழமாக இணைக்கப்பட்டுள்ளன என்பதை எடுத்துரைத்த அவர், பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, இந்தியாவுடனான உலகளாவிய வர்த்தகம், பெரும்பாலும் வளமான மசாலா பாரம்பரியத்தை சார்ந்து

இருந்தது என்று குறிப்பிட்டார். இந்தியா குறிப்பிடத்தக்க விவசாய உற்பத்தியை எட்டியுள்ள நிலையில், உணவு பதப்படுத்துதல் மூலம் மதிப்புக் கூட்டலை நோக்கி கவனம் செலுத்த வேண்டும் என்று திரு. பாஸ்வான் கேட்டுக்கொண்டார். உணவு பதப்படுத்தும் துறையில், தொழில் முனைவோரை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட பிரதமரின் கிஸான் சம்பதா யோஜனா மற்றும் PMFME போன்ற திட்டங்கள் குறித்தும் அவர் எடுத்துக் கூறினார்.

***தேர்தல் (12)***

தமிழகத்தில் 234 தொகுதிகளுக்கு, வரும் 23ஆம் தேதி, ஒரே கட்டமாக நடைபெறும் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் முடிவடைய இன்னும் 4 நாட்களே உள்ள நிலையில், அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

திண்டுக்கல்லில் திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலினும், சேலம் சங்ககிரியில் அதிமுக பொதுச்செயலர் திரு. எடப்பாடி பழனிச்சாமியும், திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தில் திமுக இளைஞரணி செயலர் திரு. உதயநிதி ஸ்டாலினும், ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில், பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரனும், செங்கல்பட்டு மாவட்டத்தில் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமானும், விருதுநகரில் தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி. பிரேமலதா

விஜயகாந்த் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் இன்று தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

***ஹரிவன்ஷ் -1 (5)***

நியமன உறுப்பினர் திரு. ஹரிவன்ஷ் தொடர்ந்து 3ஆவது முறையாக மாநிலங்களவை துணைத் தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். கருத்து வேறுபாடுகள் மற்றும் ஆரோக்கியமான விவாதம், ஜனநாயகத்தின் ஒருங்கிணைந்த பகுதி என்றும், நாடாளுமன்ற செயல்பாட்டில், இடையூறுகளுக்கு இடமில்லை என்றும், திரு. ஹரிவன்ஷ் கூறினார். இது குறித்த கூடுதல் தகவல்கள்...

**(வாய்ஸ்)**

***ஹரிவன்ஷ் -2 (18)***

**(வாய்ஸ்)**

3ஆவது முறையாக மாநிலங்களவை துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்ட பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய திரு. ஹரிவன்ஷ், அவையின் விதிகள், பிரச்சனைகளை எழுப்ப போதுமான வாய்ப்புகளை வழங்குகின்றன என்றும், அனைத்து உறுப்பினர்களும் இந்த விதிகளுக்கு கட்டுப்பட்டவர்கள் என்றும் கூறினார்.

அரசியலமைப்பு, நாடாளுமன்ற விதிகள் மற்றும் கட்டமைப்பிற்குள் அவையின் கண்ணியத்தை நிலைநிறுத்தவும், உறுப்பினர்களின்

உரிமைகளை பாதுகாக்கவும், அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதாக அவர் உறுதியளித்தார். அவையில், துணைத் தலைவராக வாய்ப்பு வழங்கப்பட்டதற்கு குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்முவுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

முன்னதாக, அவையில் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, 3ஆவது முறையாக துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. ஹரிவன்ஷ்-க்கு வாழ்த்துத் தெரிவித்து, அவரது அனுபவம் முறையாக இன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று பாராட்டினார். நாட்டை முன்னேற்றப்பாதையில் முன்னெடுத்துச் செல்வதிலும், நாட்டின் வளர்ச்சி இலக்குகளை அடைவதிலும், திரு. ஹரிவன்ஷ்-ன் பங்களிப்பு கணிசமானது என்று பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

***ஹரிவன்ஷ் - 3 (12)***

மாநிலங்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கேவும் திரு. ஹரிவன்ஷ்-க்கு வாழ்த்து தெரிவித்ததுடன், இந்த பதவியை ஏற்றுக்கொண்ட முதல் நியமன உறுப்பினர் இவர் என்பது பெருமைக்குரியது என்று கூறினார்.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி நட்டா, விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், திரு. ஹரிவன்ஷ்-ன் நேர்மை, அறிவுக்கூர்மை மற்றும் பொதுவாழ்க்கையில் ஜனநாயக விழுமியங்களுக்கான

அர்ப்பணிப்பு ஆகியவை அவரது பன்முக ஆளுமையை எடுத்துக் காட்டுவதாக கூறியுள்ளார்.

மேலும், திமுக உறுப்பினர் திரு. திருச்சி சிவா, கூறியுள்ள வாழ்த்துச் செய்தியில், திரு. ஹரிவன்ஷ் மற்றொரு பதவி காலத்தை நிறைவு செய்தால், 4 முறை இப்பதவியை வகித்த டாக்டர் நஜீமா அப்துல்லாவின் சாதனையை தொடுவார் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

*சுஜாதா ஷர்மா -1 (17)*

மேற்காசிய நெருக்கடியால் பல்வேறு இடையூறுகள் இருந்தபோதிலும், நாடு முழுவதும் உள் நாட்டு எல்பிஜி விநியோகம் நிலையானதாக உள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

புதுடெல்லியில் இன்று அமைச்சகங்களுக்கு இடையிலான சந்திப்பில் பேசிய மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் செயலாளர் திருமதி. சுஜாதா ஷர்மா, எல்பிஜி விநியோகம் தொடர்ந்து இயல்பாக உள்ளது என்றும், நாடு முழுவதும் உள்ள விநியோகஸ்தர்கள் எந்த தட்டுப்பாடும் தெரிவிக்கவில்லை என்று கூறினார்.

வணிக முன்னணியில், விநியோக மறு சீரமைப்பு சுமார் 70 சதவிகிதத்தை எட்டியுள்ளது என்றும், ஏறக்குறைய 8 ஆயிரத்து 200 டன் வணிக எல்பிஜி நேற்று விற்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

துறைமுகங்கள், கப்பல்போக்குவரத்து மற்றும் நீர்வழி அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் திரு. முகேஷ் மங்கள் கூறுகையில், மாலுமிகளின் நலன் மற்றும் தடையற்ற கடல்சார் நடவடிக்கைகளை உறுதி செய்வதற்காக வெளியுறவு அமைச்சகம் இந்தியத் தூதரகங்கள் மற்றும் கடல்சார் பங்குதாரர்களுடன் அமைச்சகம் தொடர்ந்து ஒருங்கிணைந்து செயல்படுகிறது என்று தெரிவித்தார்.

***சுஜாதா ஷர்மா -2 (5)***

அமைச்சகத்தின் பிரத்யேக கட்டுப்பாட்டு அறை செயல்பாட்டில் உள்ளது என்றும் சரியான நேரத்தில் உதவி வழங்குவதற்கும், கேள்விகளுக்கு பதில் அளிப்பதற்கும், இந்திய தூதரகங்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருவதாகவும், வெளியுறவு அமைச்சகத்தின் கூடுதல் செயலர் திரு. அஸெம் ஆர் மஹாஜன் கூறியுள்ளார்.

***காரைக்கால் (18)***

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, காரைக்கால் மாவட்டத்தில் உள்ள 5 தொகுதிகளிலும், கடந்த 9ஆம் தேதி, வாக்குப் பதிவு நடைபெற்றதைத் தொடர்ந்து, அனைத்து வாக்குச் சாவடிகளில் இருந்தும் கொண்டுவரப்பட்ட மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் காரைக்கால் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் உள்ள முதுநிலை பட்ட மேற்படிப்பு மையத்தில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகளில்

வைக்கப்பட்டுள்ளன. தேர்தல் பார்வையாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் அறைகள் முறையாக சீலிடப்பட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் விதிப்படி துப்பாக்கி ஏந்திய காவலர்களின் மூன்றடுக்கு பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்நிலையில், மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான திருமதி. இஷிதா ராட்டி, இன்று, இந்த பாதுகாப்பு மையங்களுக்குச் சென்று விரிவான ஆய்வை மேற்கொண்டார். அங்குள்ள கண்காணிப்பு கேமராக்களின் செயல்பாடு, பாதுகாப்பு பதிவேடுகள் மற்றும் நுழைவு கட்டுப்பாட்டு நடைமுறைகளை அவர் நேரில் பார்வையிட்டார். 24 மணி நேரமும் CCTV கேமரா மூலம் கண்காணிப்பில் உள்ள இந்த அறைகள் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள் வரை முழுமையான பாதுகாப்புடன் பராமரிக்கப்படும் என்று அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

***சந்திர சேகர் (8)***

முன்னாள் பிரதமர் சந்திர சேகரின் பிறந்தநாள் இன்று கொண்டாடப் படுவதையொட்டி, புதுடெல்லியில் உள்ள அன்னாரது நினைவிடத்தில், குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், முன்னாள் பிரதமர் சந்திர சேகரின் 100ஆவது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுவதாகவும், வளமான இந்தியாவை உருவாக்குவது என்ற அன்னாரது தொலைநோக்குப் பார்வையை

நிஜமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

***தீரன் சின்னமலை (6)***

சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் பிறந்தநாளையொட்டி, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அன்னாருக்கு புகழஞ்சலி செலுத்தி உள்ளார். இளம் வயதிலேயே விடுதலைப் போராட்ட வீரராக உருவெடுத்த தீரன்சின்னமலை, ஆங்கிலேய படைகளுக்கு தனது இறுதி மூச்சு வரை சிம்ம சொப்பணமாக திகழ்ந்தவர் என்று சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

***ஐபிஎல் (3)***

ஐபிஎல் கிரிக்கெட் தொடரில், இன்றிரவு 7.30 மணிக்கு, அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில், நடைபெற உள்ள போட்டியில், குஜராத் அணியும் – கொல்கத்தா அணியும் களம் காணுகின்றன.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன் வரும் 19ஆம் தேதி முதல் 2 நாள் பயணமாக இலங்கை செல்கிறார்.

நாரி சக்தி வந்தன் அதினியத்தில் திருத்தம் செய்ய அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தி உள்ளார்.

நியமன உறுப்பினர் திரு. ஹரிவன்ஷ் தொடர்ந்து 3ஆவது முறையாக மாநிலங்களவை துணைத் தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

மேற்காசிய நெருக்கடிக்கு மத்தியில், நாடு முழுவதும் உள் நாட்டு எல்பிஜி விநியோகம் சீராக உள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. AV / SM / RK